**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 291/2023** **தேதி: 27.03.2026**

**வா.சா. 1 – ராமசாமி என்ற விஜயராம்**

**11 ம் பிரதிவாதி தரப்பு மேற்கொண்டு குறுக்கு விசாரணை** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**OS No.291/2023**

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – G.ரவி (Dw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

நான் 11 ம் பிரதிவாதி நிறுவனத்தில் இயக்குநர்களில் ஒருவர் ஆவேன். எங்கள் நிறுவனத்தில் வழக்கு சொத்தை பொறுத்து கடந்த 25.03.2026 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை **பி.வா.சா.ஆ 1** தாக்கல் செய்கிறேன். அந்த தீர்மானத்தின் படி இந்த வழக்கில் வாதியின் கோரிக்கையை ஏற்று வழக்கு சொத்தை பொறுத்து வழக்கில் கோரிய பரிகாரத்தை வழங்குவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கில் நான் 11ம் பிரதிவாதி. கடந்த 1986 ல் அருப்புக்கோட்டை ஸ்ரீவிஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பாட்னர்சிஃப் என்ற ஸ்தாபனம் தான் தற்போது அருப்புக்கோட்டை விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து இன்று நீதிமன்றத்தில் ஒரு தீர்மானம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் கோரிய

பிராது படி 29.09.1986 ல் அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 1760/1986 என்று பதிவு செய்யப்பட்ட பதிவு கிரைய ஆவணத்தை ரத்து செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். வழக்கு படி தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதிலும் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.